இதழ்-74

01.08.2024

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
ச. மதுஷா
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துளை...

03 ஊடகங்களைப் பற்றி பூடகமான சில செய்திகள்
07 சுற்றுலாத் தீவினுக்கோர் கோபுரம்
11 கண்களுக்கு விருந்தாகும் கதிர்காம கந்தன் திருவிழா
12 இலங்கையை சுற்றி நடக்கும் இளைஞன்
14 ஒலிம்பிக் சுடரேந்தும் முதல் ஈழத்தமிழர்
18 இயற்கையின் கொடையான மன்னார் தீவை பாதுகாப்போம்
24 என் கால்கள் வழியே...
29 வட்டுக்கோட்டையில் திறக்கப்பட்ட தேவார மடம்
27 ஒலிம்பிக் திருவிழா 2024
37 புதினம் கேட்டியளோ..!
38 சிங்கப்பெண் சமரி அத்தப்பத்து







# ஊடகங்களைப் பற்றி பூடகமாக சில செய்திகள்

ஆசிரியர் பதிவு



சமூகத்தில் ஊடகங்களின் முக்கியத்துவம் மிகப் பெரிதானது. ஊடகங்களே இல்லாத உலகை யோசித்துப் பாருங்கள். பெற்றோல் விலையை அரசு குறைத்த தகவல் உங்களிடம் எப்படி வந்து சேரும்? உலகில் என்ன அடுத்த தெருவில் நடப்பதைக் கூட உங்களுக்கு அறிவிப்பது ஊடகங்கள் தானே? ஆக, உங்களை சமகால உண்மையை உலகில் வாழச் செய்பவை.

ஊடகங்கள். பின்வரும் விடயங்களை மக்களிடம் கொண்டு வந்து தருவதால் ஊடகங்கள் சமூகத்திற்கு மிக நெருக்கமானவையாக உள்ளன.

1. தகவல் பரிமாற்றம்: ஊடகங்கள் மக்களுக்கு தேவையான, சுதந்திரமான, மற்றும் பரந்த வரம்புள்ள தகவல்களை வழங்குகின்றன. இது மக்களின் அறிவாற்றலை வளர்க்க உதவுகின்றது.

2. அரசியல் விழிப்புணர்வு: ஊடகங்கள் அரசியல் நிகழ்வுகள், தேர்தல்கள், அரசாங்க செயல்பாடுகள் போன்றவற்றை மக்களுக்கு எளிமையாக விளக்குகின்றன. இதன் மூலம் மக்கள் அரசியல் வி'யங்களில் விழிப்புணர்வுடன் இருக்க முடியும்.

3. சமூக நீதி: ஊடகங்கள் சமூகத்தில் நடைபெறும் அநீதிகளை வெளிப்படுத்தி, அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை தூண்டுகின்றன. இது சமத்துவம் மற்றும் நீதியை மேம்படுத்த உதவுகின்றது.

4. அறிவுத்திறன் வளர்ச்சி: ஊடகங்கள் கல்வி, ஆராய்ச்சி, மற்றும் அறிவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றன. இதனால் மக்களின் அறிவுத்திறன் வளரும்.

5. மக்களின் குரல்: ஊடகங்கள் மக்களின் கருத்துக்களை, அவசியங்களை, மற்றும் பிரச்சனைகளை அரசாங்கம் மற்றும் பொது அமைப்புகள் அறிய செய்ய உதவுகின்றன.



6. பொதுமக்களுக்கான எச்சரிக்கை: மக்களுக்கு முக்கியமான எச்சரிக்கைகள், காலநிலை மாற்றங்கள், சுயாதீன அபாயங்கள் போன்றவை ஊடகங்கள் மூலம் விரைவாக பரவுகின்றன.

7. பொருளாதார வளர்ச்சி: ஊடகங்கள் வணிகங்களின் விளம்பரங்களை பரப்பி, பொருளாதார செயல்பாடுகளை ஊக்குவிக்கின்றன. இது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுகின்றது.

8. சமூக மாற்றம்: ஊடகங்கள் சமூகத்தின் அடிப்படை கருத்துக்களை மாற்றி, புதிய சிந்தனைகளை பரப்ப உதவுகின்றன. இது சமூக மாற்றத்திற்கு உதவியாக அமைகின்றது.

9. பொழுதுபோக்கு: சினிமா, இசை, விளையாட்டு நிகழ்வுகள் போன்றவை மக்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கின்றன, அதேசமயம் பல்வேறு கலாச்சாரங்களை அறிமுகம் செய்கின்றன.

10. சர்வதேச விழிப்புணர்வு: உலக அளவில் நடக்கும் நிகழ்வுகளை மக்களுக்கு அறிய செய்தல், சர்வதேச சிக்கல்கள் மற்றும் நடவடிக்கைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றது.

மொத்தத்தில், ஊடகங்கள் ஒரு சீரான, விழிப்புணர்வான, மற்றும் வளர்ச்சியடைந்த சமூகத்தை உருவாக்குவதில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. இந்த உயரிய இலக்கை ஊடகங்கள் அடைவதற்கு ஊடக தர்மத்தை ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகிறது.

ஊடக தர்மம் (Media Ethics) என்பது பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், பண்புகள் மற்றும் நெறிமுறைகளைக் குறிக்கிறது. இதன் மூலம் பொது நலனுக்காகவும், பொது நம்பிக்கையை உயர்த்தவும் ஊடகங்கள் பொறுப்புடன் செயல்படுவதை உறுதிப்படுத்தலாம். பின்வரும் சில முக்கிய ஊடக தர்ம நெறிமுறைகளை ஊடகங்கள் பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது.

1. உண்மை மற்றும் நம்பகத்தன்மை:
- செய்திகளின் உண்மைத தன்மையை உறுதிப்படுத்தல்.
- பொய்யான அல்லது தவறான தகவல்களை பரப்பாதது.

2. நேர்மை மற்றும் நியாயம்:
- செய்திகளை நேர்மையாகவும் சுயநலமில்லாமல் அளித்தல்.
- சம்பந்தப்பட்ட எல்லா தரப்புகளின் கருத்துக்களையும் எடுத்து காட்டல்.

3. தன்னிச்சையின்மை (Impartiality):
- எந்த ஒரு தரப்பையும் சாராத நிலைப்பாடு.
- தரப்புகள் அல்லது கருத்துக்களை முன்னிருத்தல் தவிர்த்தல்.

4. தனியுரிமை (Privacy):
- தனிநபர்களின் தனியுரிமையை மதித்தல்.

- தனிநபரின் அனுமதியின்றி அவற்றின் தனிப்பட்ட தகவல்களை வெளியிடாதது.

5. பொறுப்பு மற்றும் பொது நலன்:
- செய்திகளை வெளியிடும் போது பொது நலனை கருத்தில் கொள்ளுதல்.
- சமூகத்தை தீங்கிழைக்கும் அல்லது அவதியுற வைக்கும் தகவல்களை தவிர்த்தல்.

6. தெளிவுத்தன்மை (Transparency):
- செய்திகளின் மூலத்தை தெளிவாகக் குறிப்பிடல்.
- செய்திகளைப் போதிய ஆராய்ச்சி மற்றும் விசாரணையின் பின் வெளியிடல்.

7. மரியாதை மற்றும் மனிதத்தன்மை:
- அனைத்து தரப்பினருக்கும் மரியாதையுடன் நடத்துதல்.
- பொது நலன், மனித உரிமைகள் மற்றும் மதிப்பீடுகளை மதித்து செயல்படல்.

8. நடைமுறை:
- செய்திகளை சரியான முறையில் தொகுத்தல் மற்றும் வழங்கல்.
- தரமான செய்திகளை வழங்க சரியான நடைமுறைகளை பின்பற்றல்.

9. சுயகட்டுப்பாடு (Self-Regulation):
- ஊடக நிறுவனங்களின் சுயகட்டுப்பாடு மற்றும் தற்காலிக ஆய்வு.
- தவறுகள், பிழைகள் பற்றிய பொது விளக்கங்களும், சுயதிருத்தங்களும்.

10. வெளிப்படைத்தன்மை:
- உள் முன்மொழிவுகளைத் தவிர்த்து, வெளிப்படையாக செயல்படுதல்.
- மக்களுக்கு தேவையான தகவல்களை மறைக்காமல் வழங்குதல்.

ஊடக தர்ம நெறிமுறைகளை பின்பற்றுதனூடாக ஊடகங்களின் நம்பகத்தன்மையை மக்கள் மத்தியில் உயர்த்தி, பொது நலனுக்காக செயல்படுவது அவசியமாகிறது. ஆனால் சம காலத்தில் ஊடகங்கள் தமக்கான தர்ம விழுமியங்களை கடைப்பிடிப்பது குறைந்து வருகிறது. இதற்கான காரணங்களாக நாம் பின்வருவனவற்றை கருதுகிறோம்.

1. வணிக இலாப இலக்குகள்
2. வித்தியாசமான செய்திகள் ஊடாக வாசகர்களை கவர்வதில் உள்ள ஆர்வம்
3. உடனடியாக செய்தி வழங்கும் ஆர்வத்தில் உண்மைத்தன்மைகளை ஆராயாமை
4. தனிப்பட்ட பழிவாங்கல்களுக்கு ஊடகத்தை பயன்படுத்தல்
5. அரசியல் அல்லது புற அழுத்தங்கள்



### 6. அக்கறையற்ற அல்லது துறைசார்ந்த போதிய அறிவற்ற ஊடகவியலாளர்கள்

இவ்வாறு ஊடக தர்மத்தை மீறியதால் வழங்கப்பட்ட உலகப்புகழ் பெற்ற பரிசு ஒன்றை திருப்பிக் கொடுத்த ஊடகவியலாளரைத் தெரியுமா?

ஜேனத் மெரிடித் (Janet Cooke) ஒரு பிரபலமான பத்திரிகையாளர் ஆவார், அவர் 1980-ம் ஆண்டில் புலிட்சர் பரிசு பெற்றார், ஆனால் பின்னர் அவர் கதை போலியானது எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

1980-ல், ஜேனத் மெரிடித் "Washington Post" பத்திரிகையில் "Jimmy's World" என்ற கட்டுரையை எழுதியார். அந்தக் கட்டுரை 8 வயதான ஜிம்மி என்ற சிறுவனின் வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்டது. ஜிம்மி ஒரு ஹெராயின் பழக்கத்திற்கு அடிமையாக இருக்கிறான், அவனது குடும்பமும் அதனைச் சமாளிக்க முடியாத நிலையில் உள்ளது என்றவாறு உண்மைச் சம்பவமாக இந்த கதையை மெரிடித் விவரித்தார். இந்தக் கட்டுரை புலிட்சர் பரிசு பெற்றது. ஆனால் பின்னர் இது முற்றிலும் கற்பனை என வெளிச்சத்துக்கு வந்தது.




இந்த சம்பவம் ஊடக உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ”Washington Post" பத்திரிகை மெரிடித்தின் பணி அறிக்கைகளை சரிபார்த்ததில் பல தவறுகள் இருந்தன. மெரிடித் தனது கல்வி மற்றும் பணித் தரவுகளைப் பற்றி பொய்யாக கூறியதும் வெளிச்சத்துக்கு வந்தது. இது பத்திரிகை நம்பகத்தன்மை குறித்து மிகப்பெரிய விவாதங்களை எழுப்பியது.

ஜேனத் மெரிடித் புலிட்சர் பரிசை திருப்பி கொடுத்தார், மற்றும் இந்த விவகாரத்தால் அவர் பத்திரிகை உலகில் இருந்து விலக நேர்ந்தது. இந்த சம்பவம், பத்திரிகையாளர் நம்பகத்தன்மை மற்றும் உண்மையான செய்திகளை பரப்புவதில் உள்ள முக்கியத்துவத்தை மீண்டும் ஒரு முறை நினைவூட்டியது.

எனவே, வரலாறு எல்லாவற்றிற்கும் உதாரணங்களை வைத்துள்ளது. ஊடகம் சொல்வதெல்லாம் உண்மை என்று சொல்லும் இந்த உலகத்திடம் உண்மையைச் சொல்ல ஒரு ஊடகத்தை தேட வேண்டிய நிலையில் இருக்கிறோமா என்ற கேள்வி சமகால நிகழ்வுகளால் எழுகிறது. மக்கள் விழிப்படைந்து ஊடக தர்மத்திற்கு புறம்பான ஊடகங்களை புறக்கணிக்காதவரை இந்த நிலை மாறாது.

# சுற்றுலாத் தீவினுக்கோர் கோபுரம் ....!



கோடை வெயில் கொழுத்தும் காலம். இன்னொருபக்கம் எல்லா மாதங்களின் வறட்சியும் இந்தக் கோடையில்தான் துளிர்விடுகிறது. காரணம் கோடை விடுமுறை.

இயந்திர வாழ்க்கையின் நின்று விலகி உலகத்தோர் இயற்கையை சில நாள் திரும்பிப் பார்க்க விரும்பும் தருணம் கோடை விடுமுறை. அதிசயமானவை, ஆர்வமூட்டக்கூடியவை, மனதைக் கவர்பவை, இயற்கை நன்கொடைகள் போன்றவைகளைக் காண மக்கள் கடல் தாண்டி மலை தாண்டி பயணப்படும் கொண்டாட்ட காலம் இது.

தாங்கள் வசிக்கும் இடங்களிலிருந்து சென்று இன்னுமொரு இடத்தை புதிய கண்கள் கொண்டு புல்லரிக்கும் மேனி கொண்டு இரசித்து ருசிக்கும் ஆர்வமே சுற்றுலா தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாகும்.

இன்பமாக பொழுது போக்கவேண்டும் என்பது மனிதனின் அடிப்படை விருப்பமாகும். இந்த உணர்வானது உலகம் தழுவிய ஒன்றாகும். TOURISM என்ற ஆங்கில வார்த்தையின் தமிழாக்கமே சுற்றுலா ஆகும். பல இடங்களைச் சுற்றி வருவதற்கு பயணம் என்று பெயர். பயணம் என்பதில் ஆங்கில வார்த்தை TOUR ஆகும். இதிலிருந்து உருவான வார்த்தையே TOURISM. TOUR என்ற ஆங்கில சொல்லானது TORNOS என்ற இலத்தீன் சொல்லிருந்து பிறந்தது ஆகும். டோர்னஸ் என்ற லத்தீன் வார்த்தை சக்கரத்தினைக குறிக்கிறது. அதாவது சுற்றிவருவதைக்

குறிக்கிறது. இவ்வாறு லத்தீன் மொழியிலிருந்து பிறந்த TOUR என்ற சொல்லானது கி.பி.1292-ல் ஆங்கில மொழியில் இணைந்தது. எனவே பல இடங்களுக்குச் சென்று பார்த்து விட்டு மீண்டும் தனது இருப்பிடம் வந்து சேர்வதைத்தான் இந்த வுழுருசு என்ற வார்த்தை குறிக்கிறது.

எனவே சுற்றுலா என்பது ஒருவர் தாம் வாழும் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பொருள் தேடும் எண்ணம் இல்லாமல், நிலையாகத் தங்கி வாழ வேண்டும் என்னும் கொள்கையில்லாமல் பல்வேறு காரணங்களுக்காகப் பணம் செலவு செய்து பயணம் செய்வதாகும்.

அதிகமாக கிடைக்கும் ஓய்வு, சம்பளத்துடன் கூடிய விடுப்பு, மக்களின் வாழ்க்கைத்தரம், போக்குவரத்து முன்னேற்றம், விரைவான செய்தித் தொடர்பு வசதி, மக்களின் செலவழிக்கும் திறன் போன்றவை சுற்றாலாவை உலகின் ஒரு முக்கியமான தொழிற்துறையாகவே தற்சமயம் மாற்றியுள்ளன.

நிலையிலுள்ளனர். கண்ணொளியில் மலரும் இயற்கைக் காட்சிகளும் மின்னொளியில் மலரும் செந்தாமரைக் கோபுரமும் இலங்கை சிறுதீவின் சுற்றுலாப் பிரயத்தனத்தை பறைசாற்றி நிற்கின்றன.

இலங்கைக்கு வந்து குவியும் சுற்றுலா பயணிகளால் 2024 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் சுற்றுலா வருவாய் $687.5 மில்லியனாக உயர்ந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலாத்துறையானது இந்த வருடம் 2.3 மில்லியன் பார்வையாளர்களை இலக்காகக் கொண்டுள்ள அதேவேளை 2024 ஆம் ஆண்டில் 4 பில்லியன் டொலர்களை வருமானமாக பெற இலக்கு நிர்ணயித்துள்ளது.

மத்திய வங்கியின் தரவுகளின்படி, 2014 மற்றும் 2019 க்கு இடையில் மொத்த வெளிநாட்டு நாணய வருமானத்தில் சுமார் 14% சுற்றுலாத்துறை பங்களித்துள்ளது.

ஏன் எங்கள் சிறுதீவின் பெருவருவாயே சுற்றுலா அல்லவா? சுற்றுலாத் துறையில் எத்தனை முதலீடும் கொட்டுமளவு அரசினர் தயார்



எனினும் ஈஸ்டர் குண்டுத்தாக்கு, பொருளாதார நெருக்கடி, கொரோனா தொற்றுப்பரவல் போன்ற பல்வேறு சவால்கள் காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில் சுற்றுலாத்துறை வருமானத்தில் சுமார் 15 பில்லியன் டொலர் இழப்பை இலங்கை சந்தித்துள்ளது.

ஆயினும் இவ்வருடம் எதிர்பார்ப்பு அளவைத் தாண்டி வருவாய் கண்டுவரகிறது நாடு. ஜூலை 15 ஆம் திகதி வரையில் இலங்கைக்கு 1,095,675 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இதன்படி, கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த வருட இறுதிக்குள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருவார்கள் என ஊகிக்க முடிகிறது.

போருக்குப் பிறகு, 2018 இல் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு அதிகளவில் வருகை தந்திருந்தனர். அந்த ஆண்டில் 2,333,796 பேர் இலங்கைக்கு வந்தனர். அப்போதைய சுற்றுலா வர்த்தக வருமானம் 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்ந்தால், 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், இந்த நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையையும், அதிலிருந்து வரும் வருமானத்தையும் 2018 ஆம் ஆண்டை விட அதிகரித்துக்கொள்ள முடியும் என்கிறார் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் 2023 ஆம் ஆண்டில் “Sri Lanka – You'll come back for more” என்ற விளம்பரத் தொனிப்பொருளின் கீழ் புதிய வர்த்தக நாமத்தை அறிமுகப்படுத்தியதுடன், 2024 ஆம் ஆண்டில் அதிகமாக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்து அங்கீகாரத்தையும் வென்றது. மக்கள் தொடர்பாடல் திணைக்களத்தினால் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட “Seeing is Believing” திட்டத்தின் கீழ், 189 சர்வதேச பயண வலைப்பதிவாளர்கள் மற்றும் தொடர்பாளர்கள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டு, இலங்கைக்கு ஒரு பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான ஊடகப் பிரசுரங்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. ஜெர்மனியில் ITB, லண்டனில் WTM, துபாயில் ATM, பிரான்சில் IFTM மற்றும் இந்தியாவில் SATTE உட்பட 15 முக்கிய பயண கண்காட்சிகள் மற்றும் 29 (Roadshows) சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான சந்தைப்படுத்தல் துறையால் பயன்படுத்தப்பட்டன. இந்த விளம்பர நடவடிக்கைகளில் 75இற்கும் மேற்பட்ட பயண முகவர் மற்றும் ஹோட்டல் வல்லுநர்கள் பங்கேற்றனர். இலங்கையில் முதன்முறையாக நடைபெற்ற TAAI (Travel Agents Association of India) மாநாட்டில் 500 இந்திய சுற்றுலா முகவர்களும் 50 இந்திய ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர். பல உலகளாவிய சுற்றுலா ஊக்குவிப்புத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், இந்தியா மற்றும் சீனா

ஆகிய நாடுகள் முதல் கட்ட மக்கள் தொடர்பு, டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகப் பிரச்சாரங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

சுற்றுலா துறையில் 2024 ஆம் ஆண்டில் மிகவும் வளர்ச்சியடையும் முதல் ஐந்து நாடுகளில் இலங்கை பெயரிடப்பட்டுள்ளதாக உலகின் முன்னணி பயணச் செய்தி ஆதாரமான "Travel Off Path" அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த பட்டியல் எஸ்.சி.ஓ (Search engine optimization ) நிபுணர்களால் தொகுக்கப்பட்டுள்ளது.
இந்த கணிப்பை உருவாக்க பெரிய அளவிலான இணைய தேடல் அளவு தரவு பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், இலங்கைத் தீவானது அதன் கவர்ச்சியான




இயல்பு, சூடான காலநிலை, வண்ணமயமான கலாச்சாரம் மற்றும் அற்புதமான உணவு ஆகியவற்றால் உலகெங்கிலும் உள்ள பயணிகளை நீண்ட காலமாக கவர்ந்துள்ளது. இதன்படி, 2024ஆம் ஆண்டில் மிகவும் பிரபலமான சுற்றுலா இடங்களில் ஒன்றாக இலங்கை மாறமுடியும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இல்ஙகையின் வருமானத்தின் அடிநாதமாக விளங்கும் சுற்றுலாத்துறைக்கான அடையாள மாகவும் அழைப்பிதழாகவும் காணப்படும் செந்தாமரைக் கோபுரம் கறுத்த இரவொன்றில் மின்னொளியில் பிரகாசிப்பதையே அட்டையில் காண்கிறீர்கள். இலங்கையின் அடையாளமாக இன்று பார்க்கப்படும் இந்த கோபுரத்தினை வினைத்திறனாக பயன்படுத்தி வருமானம் ஈட்ட வேண்டும் என்பதே அனைவரதும் பேரார்வம்.

அடுத்த வேளை உணவுக்கே வழியில்லாத ஒருவனுக்கு ஒரு செல்வந்தர் பெரிய மாளிகையை இலவசமாக பரிசளிக்கிறார் என்றார்கள். ஆனால் அந்த ஒப்பந்தத்தை ஆராய்ந்தவர்கள் அது பரிசில்லை என்றும் மீள முடியாத கடன் என்றும் சொன்னார்கள். எதுவானாலும் அந்த மாளிகையைப் பராமரிக்க செலவுக்கு என்ன செய்வான் என்ற கேள்விக்கு பதில் தெரியாதவரை அவனுக்கு அது பரிசாக இருக்க வாய்ப்பில்லை. ஆனால் அது அவனுக்கு புரியாதவரை எதுவும் மாறப்போவதில்லை.

# கண்களுக்கு விருந்தான கதிர்காமக் கந்தனின் பெருந்திருவிழா







வரலாற்றுச் சிறப்புமிக்கதும் திருப்புகழ் பாடப்பெற்றதுமான கதிர்காம கந்தனின் 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவ பெருவிழா 06.07.2024 ஆரம்பமாகியது. தினமும் பல்வேறு கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளுடனான ஊர்வலம் நடைபெற்று, 21ஆம் திகதி இறுதிப் பெருவிழா நடைபெற்றது. பின், 22ம் திகதி காலை, மாணிக்க கங்கையில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட தீர்த்தோற்சவத்தையடுத்து , உற்சவம் இனிதே நிறைவடைந்தது.


















ஷஹ்மி ஸஹீத் 2020 மே மாதத்தில் தனது சேனலை துவங்கி, ஆரம்பத்தில் இலங்கை வரலாற்று முக்கியத்துவமான இடங்களுக்கு சென்று வீடியோ பதிவிட்டுக் கொண்டிருந்தார். 2021 இல் முதன்முதலாக பேருவளையில் இருந்து காலி வரை நடைபயணம் மூலம் செல்ல முயற்சி செய்து, சில தவிர்க்க முடியாத காரணங்களால் அப்பயணம் தோல்வியடைந்த பின்னர், கிழக்கு மாகாணத்தை ஆராய்ந்து பார்க்கும் முயற்சியில் இறங்கினார்.

2022 செப்டம்பரில், "Walk and Lift" தொடரை துவங்கி, அனைத்து மாவட்டங்களையும் வெற்றிகரமாகச் சென்று முடித்தார். மேலும் பேருவளையில் இருந்து சிவனொலிபாத மலைக்கு 3 நாட்களில் நடந்தார், பேருவளையில் இருந்து கொழும்பு வரை 12 மணித்தியாலத்தில் நடந்தார். இப்போது, 2024 ஜூலை 13 இல் "Walking Around The Island" சவாலில் ஈடுபட்டு, 400 கி.மீ.யை ஏற்கனவே நடந்து முடித்துள்ளார்!

நமது நாட்டின் அழகையும் வரலாற்றையும் புதிய கோணத்தில் வெளிக்கொணரும் இவரின் பயணங்கள் ஏராளமான ரசிகர்களை ஈர்த்துள்ளன. "Walking Around The Island" சவாலை தொடங்கிய முதல் நாளிலிருந்தே, அவரது திரையில் வெளிவரும் காட்சிகள் அனைத்து தரப்பினரின் மனதையும் கவர்ந்து வருகின்றன. சாகசம், ஆர்வம், மற்றும் பாசம் நிரம்பிய இந்த பயணங்களின் மூலம், ஷஹ்மி தனது சொந்த அனுபவங்களை பிரபலமாக்கி வருகிறார்.

அவரின் பயணங்கள் தனிப்பட்ட உழைப்பையும் மன உறுதியையும் வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு நகரமும், கிராமமும், அவருக்கு புதிய அனுபவங்களையும் சவால்களையும் வழங்குகின்றன. இப்படி, இவரின் முயற்சிகள் பலருக்கும் முதலீட்டாகவும் ஊக்கமாகவும் அமைந்துள்ளன. அவரது காணொளிகள், இயற்கையின் அழகு மற்றும் மனிதர்களின் இனிய நிகழ்வுகளை பிரதிபலிப்பதாகும்.

இப்பொழுது, பல ஊர்களில் மக்களின் ஆதரவு கிடைக்கப் பெறுகின்றது. இவரின் சாகசங்களும் அனுபவங்களும் மக்கள் மத்தியில்

பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. மக்கள் அவருடன் இணைந்து பயணத்தை ஆதரிக்கின்றனர், இதனால் அவரின் சாதனைகள் மேலும் பெருகுகின்றன. ஷஹ்மியின் பயணங்கள் மட்டும் அல்லாமல், அவரது உற்சாகமும் பலருக்கு ஊக்கமாக இருக்கின்றது.

இவர் நடக்கும் பொழுது பல்வேறு இன்னல்கள் வந்தாலும், இவருக்கு ஓர் பெரிய மன தைரியம் உண்டு. காற்றின் குளிர்ச்சி, மழையின் அடிச்சல், கண்ணிறைவாகும் வெயில், இவை அனைத்தையும் தாண்டி அவர் தனது பயணத்தை தொடர்கிறார். இவரின் மனோபலமும் உடல் சக்தியும் அவரின் சாதனைகளுக்கு ஆதாரமாக இருக்கின்றன. ஒவ்வொரு அடியிலும் அவர் எடுக்கின்ற ஊக்கமும் உற்சாகமும் பலரின் மனதில் இடம் பிடித்துள்ளது.

அவரை முட்டாள் என்று பலர் நினைத்தனர் அவர்கள் சிரித்தனர். இப்போது அனைவரும் அவனை பாராட்டுகிறார்கள்.



## அபிசேக கந்தனின் திருவிழா ஆரம்பம்

வரலாற்று பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த காம்யோற்சவம் 11.07.2024 வியாழக்கிழமை ஆரம்பமாகி பக்தி பூர்வமாக நடைபெற்று வருகிறது.

கீரிமலை கண்டகி தீர்த்தக்கரைக்கு ஆடி அமாவாசையான 04.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கந்தசாமியார் தீர்த்தமாட எழுந்தருளி மக்களுக்கு அருள் பாளிப்பார். அடுத்த வருடம் கும்பாபிஷேகம் காண உள்ள அபிசேக கந்தனின் இந்த வருட காம்யோற்சவம் உலகெங்கும் உள்ள அடியவர்களின் வருகையோடு சிறப்புற நிகழ்ந்து வருகின்றது.



## ஒலிம்பிக் சுடரேந்தும் முதல் ஈழத்தமிழர்



உலகத்தில் ஈழத்தமிழினம் அடையாளப்படுத்தப்படுகிறது. உலகத் தமிழருக்கான அங்கீகாரம் சிறுகச் சிறுக பல வடிவங்களில் உலகமெங்கு "தர்சன் செல்வராஜா" பிரான்ஸ் நாட்டில் வாழ்கின்ற அனைத்து தமிழர்களும் அறிந்த தமிழராவார். 2006 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டுக்கு வந்தவர், வெதுப்பி தயாரிப்பில் ஈடுபட்டு சிறந்து விளங்கினார். கடந்த ஆண்டு முதலாம் இடத்தையும் பெற்றார்.

நூறு வருடங்களுக்கு பின்னர் பிரான்சில் ஒலிம்பிக் மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறவுள்ளது. அவரது திறமைக்கான அங்கீகாரமாக ஒலிம்பிக் சுடரினை ஏந்திச் செல்லும் வாய்ப்பு கிடைத்த முதல் ஈழத்தமிழரானார். ஈழத் தமிழர்களை பெருமைப்பட வைத்த தர்சன் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கான புதிய வழிமுறை




குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொதுமக்களின் வசதிக்காக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கான புதிய வழிமுறையை அறிவித்துள்ளது. (ஜூலை 16) முதல் அமுலுக்கு வரும் வகையில் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கும் புதிய முறை அமுல்படுத்தப்பட்டதாக குடிவரவுத் திணைக்களம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் https://www.immigration.gov.lk என்ற இணைப்பின் மூலம் முன் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. குடிவரவுத் திணைக்களம் பதிவு செய்ததன் பின்னர் கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கான வாய்ப்பு முன்னுரிமை அடிப்படையில் பெறப்படும் என்றும், இது சாதாரண மற்றும் ஒரு நாள் சேவைகளுக்குக் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

# யாழ் மக்களுக்கான மருத்துவ சேவைக்கு கிடைத்த பெரும் நன்கொடை



யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.மருத்துவபீடம், சிவபூமி அறக்கட்டளை, இணைந்து நடாத்தும் பெண்கள் தொடர்பான கருவளச் சிகிச்சை நிலையத்திற்கு கொடையாளர் சதா.மங்களேஸ்வரன் கலாநிதி ஆறு.திருமுருகனின் வேண்டுகோளுக்கு இணங்க (அபயம் அறக்கட்டளை ஊடாக) வழங்கிய 350 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்கான் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு 17.07.2024 பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனால் மேற்படி ஸ்கான் மெசின் யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர், யாழ். மருத்துவ பீட மகப்பேற்று வைத்திய நிபுணர்கள், தாதியர்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது. யாழ் மக்களுக்கான மருத்துவ சேவையில் இது ஒரு அளப்பரிய பணியாகும்.



# யாழ் வைத்தியசாலைக்கு அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிறுவனம் எண்டோஸ்கோபி கருவியை (Endoscopy) அன்பளிப்பாக வழங்கியது

யாழ் போதனா வைத்தியசாலைக்கு AMAF ( Australia Medical Aid Foundation - AMAF ) நிறுவனம் 60 mn பெறுமதியான எண்டோஸ்கோபி (Endoscopy) கருவியை அன்பளிப்பு செய்தது. மேற்படி கருவியின் மூலம் வைத்திய சாலையின் சேவைகளை மேலும் சிறப்பாக வழங்க முடியும். AMAF நிறுவனம் சார்பில் Dr. மன்மோகன் அவர்கள் இந்த கருவியை கையளித்தார். AMAF நிறுவனத்திற்கும் அதற்காக நன்கொடைகளை செய்து வரும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.






## சக்தி வாய்ந்த சிங்கப்பூர் கடவுச்சீட்டு

சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் (IATA) தரவுகளின் அடிப்படையில் உலகின் சக்திவாய்ந்த 199 நாடுகளின் பாஸ்போர்ட்டுகளின் தரவரிசையை ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் தற்போது வெளியிட்டுள்ளது. அந்த வகையில் உலகின் மிகவும் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசையில் சிங்கப்பூர் முதலிடம் பிடித்துள்ளது. அந்நாட்டின் பாஸ்போர்டை பயன்படுத்தி 195 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும் என கூறப்படுகிறது. மேலும், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் மற்றும் ஆகிய நாடுகள் இந்த தரவரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன. இந்த நாடுகளின் பாஸ்போர்டை பயன்படுத்தி 192 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்.



## மாற்றுத்திறன் கொண்ட பார்பி பொம்மை




1959 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பார்பி பொம்மைகள் உலக அளவில் இன்றும் மிக பிரபலமாக உள்ளது. உலக அளவில் பிரபலமாக இருந்தாலும் பார்பி பொம்மைகளின் மீது பல விமர்சனங்கள் இருந்து வருகின்றது. வெள்ளை நிறம், கச்சிதமான உடல் அமைப்பு ஆகியவை தான் அழகானவை என்ற தவறான தோற்றத்தை பார்பி உருவாக்குவதாக பலர் விமர்சித்துள்ளளனர்.

இந்நிலையில், அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறையை கடைப்பிடிக்கும் வகையில் பார்வை மாற்றுத்திறன் கொண்டது போன்ற பார்பி பொம்மையையும் உடல்நல குறைபாடுகள் உடைய கருப்பு நிற பார்பி பொம்மையையும் அமெரிக்காவின் மேட்டல் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. பார்வையற்றோருக்கான அமெரிக்க அறக்கட்டளை மற்றும் தேசிய டவுன் சிண்ட்ரோம் சொசைட்டி உடன் இணைந்து இந்த பொம்மையை மேட்டல் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

## எலோன் மஸ்க் இலங்கை வருகிறாரா?

இலங்கையில் தனது ஸ்ரார்லிங்க் ( Starlink) செயற்கைக்கோள் இணைய சேவையை தொடங்குவதற்காக உலகின் முன்னணி பணக்காரரும், ஸ்பேஸ் எக்ஸ், ரெஸ்லா கார் தலைமை செயல் அதிகாரியும், ஸ்ரார்லிங் சேவையின் உரிமையாளருமான எலோன் மஸ்க் அடுத்த மாதம் இலங்கை வர வாய்ப்புள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். முன்னதாக, Starlink அங்கு இணைய சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கம் பூர்வாங்க அனுமதியை வழங்கியது. அதன்பிறகு, 28 ஆண்டுகளுக்குப் பிறகு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் திருத்தம் செய்வதன் மூலம் அரசாங்கம் செயல்முறையை துரிதப்படுத்தியது.

எலோன் மஸ்க் வருகைக்கான காலக்கெடு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், 'ஸ்ரார்லிங் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இந்த சேவையை செயல்படுத்த மூன்று வாரங்கள் ஆகும் என்று உபகரணங்கள் மற்றும் அனைத்தையும் நிறுவுவதன் மூலம் செயல்பாட்டிற்கான உள்கட்டமைப்பை அமைப்பதற்கு அவர்களுக்கு நீண்ட காலம் தேவை,' என்றும் கூறினார்.







கனிஹீரா ஜெய காந்தன்
ஊடகக்கற்கைகள்துறை மாணவி
முருங்கன்

# இயற்கையின் கொடையான மன்னார் தீவை பாதுகாப்போம்

மன்னார் தீவானது புவியியல் ரீதியில் இலங்கையின் வடமேற்குக் கரையில், வடமாகாணத்தில் மூன்று பக்கங்களும் கடல்நீரால் சூழப்பட்ட மிகச்சிறிய தீவாக விளங்குகின்றது. மாதோட்டம் மாந்தை அல்லது மகாதித்த என்று பழைய வரலாறுகளில் குறிப்பிடப்படுகின்ற இடமானது தற்போதைய மன்னாரினை குறித்து நிற்க்கின்றது. இத்தீவானது சுமார் 32 Km நீளத்தினையும், சராசரியாக 4Km அகலத்தினையும், 130 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினையும் கொண்டு திகழ்கின்றது. இத்தீவில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் குறைவான சனத்தொகையினர் வாழ்கின்றனர். இலங்கையின் பிற பகுதிகளுக்குக்கான தரைவழிப்போக்குவரத்து பாலம் ஒன்றின் மூலமாக இணைக்கப்படுகின்றது.

வரலாறுகளில் மாதோட்டம் என்பது, இலங்கைத் தீவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சிறப்புடன் விளங்கிய துறைமுகப்பட்டினம் ஆகும். பாளி மொழியில் எழுதப்பட்ட இலங்கையின் பழைய வரலாற்று நூல்கள் இதனை. கி.பி 13 ஆம் நூற்றாண்டுக்கு முன் இலங்கைத் தீவின் முக்கிய துறைமுகமாக மாதோட்டம் விளங்கியதுடன் உலகளாவிய வணிகத்திலும் சிறப்பிடம் பெற்றிருந்ததாக கூறுகின்றது. பல்வேறு நூல் ஆதாரங்களும், தொல்பொருட்களும் இதற்குச் சான்றாக விளங்குகின்றன. பண்டைய உலகின் பல நாடுகளைச் சேர்ந்த நாணயங்களும், மற்றும் பல வணிகப் பொருட்களும் அகழ்வாய்வுகள் மூலம் இவ்விடத்தில்

கண்டறியப்பட்டுள்ளன. இந்தச் சான்றுகள், இப்பகுதியில் பெருமளவில் மக்கள் வாழ்ந்து வந்தமையும், மாதோட்டத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெருமளவில் வேளாண்மை முயற்சிகள் இடம்பெற்றதையும் காட்டுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இத்தீவானது தன்னத்தே அரைவெப்ப வலயத்தில் அமைந்துள்ள சதுப்பு நிலங்களான கடற்கரை, மணல்திட்டுக்கள், பற்றைக்காடுகள், சேற்றுத்தரை மற்றும் மணற்தரை போன்ற பல்வேறு சூழல்தொகுதிகளைக்கொண்டதுடன், இயற்கை வளங்களான கனியமணல், பெற்றோலியம் மற்றும் கண்டல் தாவரங்கள் பலவற்றினைக் கொண்ட ஒரு அழகிய இயற்கையின் அற்புத கொடைகளை கொண்ட வரலாற்றுச்சிறப்புமிக்க தீவாக விளங்குகின்றது.

இலங்கையில், மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளம், வங்காலை பறவைச் சரணாலயம் மற்றும் பார் கற்பார்த்தொடர் கடலகச் சரணாலயம் ஆகிய மூன்று சரணாலயங்களும், வில்பத்து தேசியவனமும், விடத்தல்தீவு கடல்நீர்ஏரியும் மன்னார் மாவட்டத்தில் காணப்படுகின்றமை விசேட அம்சங்களாகும். இவற்றை பார்வையிடுவதற்கு உள்நாட்டு,





வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் எமது தீவை நோக்கி வருகைதருகின்றனர். மன்னார் மாவட்டத்தில் முக்கியமான நீர் களஞ்சியப்படுத்தல் பகுதியொன்றாக கட்டுக்கரைக் குளம் விளங்குவதுடன், இது மாவட்டத்தில் பிரதான நீர்தேவையை நிவரத்தி செய்து வருகின்றது. மற்றும் கட்டுக்கரை குளமானது மன்னாரினை சுற்றியுள்ள 160 சிறிய குளங்களுக்கு தேவையான நீரை விநியோகிக்கின்றது.

மன்னார் தீவானது மூவாயிரத்திற்கு மேற்பட்ட வேறுபட்ட வகைகளிலான விலங்குகளையும், தாவரங்களையும் மற்றும் வேறு வகைகளைக் கொண்ட பெருமளவு உயிரினங்களின் வாழிடங்களையும் கொண்டுள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இத் தீவினைத்தேடி புலம்பெயர்கின்ற 168 வகை பறவைகளும், 5 வகையான கடல் ஆமைகளும், 450 வேறுபட்ட வகை கொண்ட மீன்களும், 79 வகைகளைக் கொண்ட கடற்பஞ்சுகளும், 260 வகைகளைக் கொண்ட மொலஸ்காக்களும் (நத்தை, மீனங்கள்), 100வகை முட்டோலிகளும் (கடல் நட்சத்திரங்கள், கடலட்டைகள்) வருகை தருகின்றன.

மன்னாரில் உள்ள பெருமளவு மக்கள் விவசாயிகளாவர். நெல், மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் சிறுதானியங்கள் தெங்கு, மர முந்திரிகை போன்ற பெருந்தோட்டப் பயிர்களும் மற்றும் பனை ஆகியனவும் இங்கே செய்கை பண்ணப்படும் பிரதான பயிர்களாகும். கரையோரங்களில் வாழ்கின்ற மக்கள் அதிகளவில் மீன்பிடிக்கைத்தொழில் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய தொழில்களை மேற்க்கொண்டுவருகின்றனர். உப்பு உற்பத்தி (ஓலைத்தொடுவாய், வங்காலை) மற்றும் ஆடு வளர்ப்பு (தாராபுரம்) ஆகிய தொழில்களும் மேற்க்கொள்ளப்பட்டுவருகின்றன.

இவ்வாறாக வரலாற்று, புவியியல், சுற்றுலா முக்கியத்துவமும் வாய்ந்த எமது தீவில் அபிவிருத்தி என்ற பெயரால் மேற்க்கொள்ளப்படும் விடயங்கள் மன்னார் தீவின் இருப்பினையும், எமது வாழ்வாதரத்தினையும், இயற்கை வளங்களையும் அழிக்கின்ற அபிவிருத்தித் திட்டங்களாக காணப்படுவது மிகவும் கவலைக்குரியவிடயமாகும். அந்த வகையில் தற்போது எமது மக்களின் மிகப்பெரிய பிரச்சனைக்குரிய சில விடயங்களாக பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றந.

### 1.காற்றாலை மின்உற்பத்தி நிலையம்

இதுவரைக்கும் 36 காற்றாடிகள் மன்னார் - நடுக்குடா பகுதியிலும், 5 காற்றாடிகள் நலுவிலிக்குளம் பகுதியிலும் அமைக்கப்பட்டுவிட்டன. இவ்வாறான உயர் மின்வலு காற்றாடிகளின் இரைச்சல் காரணமாக மீன்கள் இறப்பதுடன், கரைவலை மீன்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. மற்றும் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் 18 மீன்ஓடைகள் அழிக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக மீன்பிடியினை தமது வாழ்வாதரமாக கொண்ட பலர் பாதிக்கப்பட்துள்ளதுடன் மீன்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

காற்றாலைகளை அமைப்பதற்காக மரங்கள் அழிக்கப்படுகின்றன. மக்களின்











குடிநீர்மாசுபடுத்தப்படுகின்றது, விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றது, மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன, சுற்றுச்சூழல் மாசடைகின்றது, வீடுகளின் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்படுகின்றன மற்றும் காற்றாலைகளின் கதிர்வீச்சுக்கள் காரணமாக பல தொற்றாநோய்கள் ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு பறவைகளின் பறப்பு பாதைகளின் (flay way) இந்த காற்றாலை அமைக்கப்பட்டமையால் பிளமிங்கோ பறவைகளின் வருகையை கணிசமானளவு குறைவடைந்துள்ளது. மற்றும் காற்றாலை மின்விசிறிகளின் இறக்கைகளில் அடிபட்டு பல பறவைகள் இறக்கின்றன. ஏராளமான எமது நாட்டினை சேர்ந்த பறவைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்ப்பட்டுள்ளது.

### 2.கனிய மணல்அகழ்வு

மன்னார் தீவில் பல இடங்களில் (பேசாலை, தலைமன்னார்) கிட்டத்தட்ட 4600 துளைகள் கனியமணல் பரிசோதனைக்காக போடப்பட்ட துளைகள் காரணமாக நிலத்தின் உறுதித்தன்மை அற்றுப்போவதுடன், இவ்வாறான துளைகளில் கடல் நீர் நிலத்தில் புகுந்து நன்னீருடன் கலப்பதால் பருவநிலை மாற்றத்தால் உயரும் கடல் மட்டம் மன்னார் தீவினை முழுவதுமாக கடலில் மூழ்கடிக்கும் அபாயம் காணப்படுகின்றது.

### 3. இறால் வளர்ப்பு

இறால் வளர்ப்பிற்காக பயன்படுத்தப் படுகின்ற இரசாயணங்கள் மற்றும் இறால் குழிகளிகளிலிருந்து அகற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்ற

வனவிலங்கு புகலிடத்திற்கு சொந்தமான பகுதிகளில் வெறியேற்றப்படுவதன் காரணமாக பற்றீரியா மற்றும் வைரஸ் நோய்க்கிருமிகள் உருவாவதுடன்இ நீரின் கட்டமைப்பு பாதிக்கப்பட்டு அங்குள்ள கண்டல் தாவரங்களுக்கும் உட்பட உயிரினங்களுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

### 4. முறையாக திட்டமிடப்படாத அபிவிருத்திகள்

பல்வேறுபட்ட அபிவிருத்திட்டங்களின் பெயரில் முறையாக திட்டமிடப்படாத தரமற்ற வீதிகளை அமைத்தல், பாலங்கள் முறையாக நீர் வழிந்தோடக்கூடிய முறையில் அமைக்காமை காரணமாக மழைகாலங்களில் கடல் நீர் வீடுகளுக்கு உட்புகுதல், போக்குவரத்து தடைப்படல், வீதிவிபத்துக்கள் ஏற்ப்படுதல் போன்ற பல்வேறு பிரச்சனை மன்னார் தீவின் மக்கள் எதிர்கொள்கின்றனர்.

### 5. பெற்றோலிய அகழ்வு

உத்தேச கனிய எண்ணெய் அகழ்வு நடவடிக்கையானது மன்னார் தீவுப்பகுதிகளை சுற்றி மேற்க்கொள்ளப்படுவதன் காரணமாக கடற்பரப்பு பாதிக்கப்படுவதுடன் அதிர்வுகளின் காரணமாக மீன்கள் பாதிக்கப்படுகின்றன.

அபிவிருத்தி என்ற பெயரில் மேற்க்கொள்ளப்படும் இவ்வாறன திட்டங்கள் மக்களுக்கு அதிகளவில் பாதகங்களையே ஏற்ப்படுத்துகின்றன. வெறுமனே பொருளாதார வளர்ச்சி மாத்திரம் மக்களை அடுத்த கட்டம் நோக்கி முன்னேறவைக்காது என்பதனை அனைத்துதரப்பினரும் அறிந்து கொள்ள வேண்டும். எமது மன்னார் தீவின் இருப்பினையும், இயற்கைவளங்களையும் திட்டமிட்டு அழிக்க நடவடிக்கைகளுக்கும் எதிராக குரல்கொடுக்க வேண்டியது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். எமது தீவின் முக்கியத்துவம் உணர்ந்து எமது நிலங்களை விற்பனை செய்யாது பாதுகாப்பதுடன் அடுத்த சந்ததிகளுக்கும் சுகந்திரமாக வாழ எம்மால் இயலுமான உதவிகளை செய்து இந்த அழகிய இயற்கை தீவினை அடுத்த தலைமுறைக்கு ஒப்படைப்போம்.



# உங்களுக்கு சிலிண்டர் வைக்க வேற இடமே கிடைக்கவில்லையா..???






பஜாஜ் நிறுவனம் அறிமுகம் செய்துள்ள... உலகின் முதல் ஊபே பைக் இது. (Freedom 125) 2 லிட்டர் கெபாசிட்டி பெட்ரோல் டேங்க்... வழக்கம் போல சீட்டுக்கு முன்னாடி இருக்கிறது. பெட்ரோல் டேங்க் சைஸ் சிறிது என்பதால்.... பைக்கின் சீட்டு 4 பேர் ஏறி அமரும் அளவுக்கு செம நீளமாக உள்ளது.

அப்புறம்... அந்த 12.5 லிட்டர் கொள்ளளவு மற்றும் 16 கிலோ எடை கொண்ட CNG சிலிண்டர் எங்கே?... என்று தேடினால்... அதை... உட்காரும் சீட்டுக்கு அடியில் ஒளித்து வைத்துள்ளனர். அதனை தொடர்ந்து... EXIDE பேட்டரியை வேறு வைத்துள்ளனர். CNG என்றால்... Compressed Natural Gas. இந்த, ”அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு”it... CNG சிலிண்டரில்... சுமார் 200 KSC (2844 psi) பிரஷர் கொடுத்து அடைத்து வைத்திருப்பார்கள்.

நமது பைக் டயர்களில்... 2 KSC முதல் 3 KSC ( 28 psi to 42 psi) வரை மட்டுமே... அழுத்தப்பட்ட காற்றை (Compressed Air) அடைத்து வைத்திருப்போம். அப்படியென்றால்.... டயரை விட100 மடங்கு பிரஷர் கொண்ட எரிவாயு சிலிண்டரைத்தான்... நாம் உட்கார்ந்துள்ள சீட்டுக்கு அடியில் வைத்துள்ளனர்..! நமது வீட்டு உபயோக LPG சிலிண்டர் 29 கிலோ எடை கொண்டது. அதன் பிரஷர் 18 KSC (256 psi) மட்டுமே. அதைவிட 10 மடங்கு பிர‘ர் கொண்டது அந்த பைக் CNG சிலிண்டர்.

நான் சில CNG கார்கள் பார்த்திருக்கிறேன். அதிலெல்லாம் அந்த சிலிண்டர்... காரின் பின்னாடி... ”காருடைய டிக்கி”-யில்தான் வைக்கப்பட்டு இருக்கும்..!! ஆனால்... அந்த 200 KSC **ஹை** பிரஷர் சிலிண்டர்... நமது சீட்டுக்கு அடியில் இருக்க... அதன் மீது உட்கார்ந்துதான்... நாம் அந்த பைக்கை ஓட்டியாகனுமாம்..!!!

ஐ.வி.மகாசேனன்



7

# என் கால்கள் வழியே...

**டெல்லியில் என் முகவரி!**

டெல்லிக்கான எனது பயணம் முகவரிக்கானதாகவே அமைந்தது. அது என் அடையாளம் சார்ந்ததாக அமைகின்றது. என் அடையாளத்தை செதுக்குவதற்கு நான் டெல்லியில் இரு வருடங்கள் நிலைத்திருப்பதற்கு ஒரு முகவரி தேவைப்பட்டது. அதனை பெறுவதற்கு ஒரு மாதம் இழுபறிப்பட வேண்டியதாயிற்று.

முன்னைய பதிவுகளில் குறிப்பிட்டதை போன்று செப்டெம்பர்-13 தமிழ் நாட்டு நண்பர்களின் விடுதி எனக்கு தற்காலிகமானதே ஆகும். தற்காலிகமானது என்ற நினைப்புடனேயே செப்டெம்பர்-13 இரவு நண்பன் லோகேசுடன் அவர்களின் விடுதிக்கு சென்றேன். மறுநாள் தொடக்கம் பல்கலைக்கழகத்துக்கு போக ஆரம்பிச்சாச்சு. தமிழ் நாட்டு நண்பர்கள் வெளிநாட்டு மாணவர்களுக்கென்று தனியான விடுதி உள்ளது. அது நிச்சயம் எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையையும், மீள வெளிநாட்டு மாணவர்கள் பதிவு அலுவலகத்தில் விடுதி தொடர்பில் விசாரிக்க வலியுறுத்தினார்கள். முதல் நாள் அனுபவம், ‘வெளிநாட்டு மாணவர்கள் பதிவு பீடாதிபதி விடுதி தொடர்பில் சீரான பதில் தரப்போவதில்லை’ என்பதில், எனக்குள் உயர்வான நம்பிக்கை இருந்தது. எனினும் தமிழ்நாட்டு





நண்பர்களின் வலியுறுத்தலால் மீளவும் பீடாதிபதியிடம் சென்று விசாரித்தேன். பீடாதிபதி கொடுத்த வாக்கை மாற்றி பேசு பழக்கம் இல்லாதவர். 'No means No' தான். ஒவ்வொரு நாட்டுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலேயே பகிரப்படுவதனால், ஏற்கனவே இலங்கையர்களின் எண்ணிக்கை முடிந்து விட்டதாக பெரிய நீண்ட கதையை சுருக்கமாக தந்து அனுப்பினார்.

பீடாதிபதியின் நடத்தை, திரைப்படங்களில் பார்த்த இந்திய நிர்வாகத்தின் Coiy நேரடியாக அனுபவிக்கும் எண்ணத்தை உருவாக்கியது. டெல்லி பல்கலைக்கழக்கழக வளாக கட்டமைப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாக கட்டமைப்பு போன்றதே ஆகும். ஆன பரப்பு ஏக்கர் ஏக்கர் கணக்கில் வேறுபட்டது. இந்தியாவில பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தின் கீழ் Colleges காணப்படும். Colleges-இலும் இங்கு பட்டப்படிப்புக்களே இடம்பெறும். டெல்லி பல்கலைக்கழகத்திற்கு கீழ் 77 Colleges காணப்படுகின்றது. College-இல் இளமானி (Bachelor) பட்ட கற்கைளே நடைபெறும்.



முதுமானி (Masters) பட்ட கற்கைகளுக்கான அனுமதிகள் Colleges-இல் வழங்கப்படும். எனினும் கற்கைகள் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள துறைகளிலேயே (Departments) இடம்பெறும். மேலும் டெல்லி பல்கலைக்கழகம் North Campus, South Campus என அலகாக காணப்படுகின்றது. North Campus-l சுற்றி தான் நிர்வாக கட்டங்களும் காணப்படும். South Campus மாற்றன் பிள்ளை மனப்பாங்குடனேயே அணுகப்படும். வெளிநாட்டு மாணவர்களுக்கான அனுமதி குறிப்பாக இந்திய புலமைப்பரிசிலுக்கு ஊடாக நகர்த்தப்படும் அனுமதிகள் நேரடியாக பல்கலைக்கழக துறைகளுக் கூடாகவே வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழக கட்டமைப்பு விளக்கத்தை தாண்டி ஊழல் பிரச்சினைக்குள்ள வருவோம். பரந்த கட்டமைப்பாக காணப்படுவதனால் டெல்லி பல்கலைக்கழகத்தை ஒரு எல்லைக்குள் சுருக்க முடியாது. டெல்லி பல்கலைக்கழக கட்டட வளாகங்களை சுற்றி பல தனியார் விடுதிகள். ஏழை, பணக்காரன், நடுத்தரம் என சகல தரத்திலும் தனியார் விடுதிகள் காணப்படுகின்றது. விஜய் நகர், கமலா நகர் மற்றும் முகர்ஜி நகர் போன்ற இடங்கள் முழுமையாக தனியார் விடுதிகள் நிறைந்த இடங்களாகவே காணப்படுகின்றது.

முகர்ஜி நகரில் அதிகம் வண்டுகள் மொய்க்கும். அழகிய பூக்களில் தேனினை பருக. இந்திய எதிர்க்கட்சி

தலைவர் ராகுல் காந்தி டெல்லி பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த போதும் முகர்ஜி நகருக்கே சென்றிருந்தார்.

தனியார் விடுதிக்கான வருமானத்தை பல்கலைக்கழக பதிவு அலுவலகங்களே அனுப்பி வைக்கின்றது. குறிப்பாக வெளிநாட்டு மாணவர்கள், அதிலும் இந்திய புலமைப்பரிசியல் வழங்குகின்றது. அதனை கொடுத்து இருக்கலாம் என்ற ஆதங்கம். என் நண்பர்கள், ‘இந்திய புலமைப்பரிசில் என்ற பேரில காசு தருது. நல்லா செலவழிச்சு, அதனை இந்தியாட்டயே கொடுத்துட்டு போகலாமே’ என்பார்கள். அப்படி ஒரு எண்ணத்தில தான் பீடாதிபதியும் தனியார் விடுதிக்கான திசையை காட்டுறார் போல.
ஆக பல்கலைக்கழக விடுதி இல்லை என்பது முடிவாகியது. தற்காலிகம் தான் நிரந்தரம் என தீர்மானமாகியது. டெல்லியின் ஆரம்ப முகவரி ‘இல:8/33, முதல் தளம், 8வது தொகுதி, இரட்டை மாடி-விஜய் நகர், டெல்லி 110009’.

தமிழ் நாட்டு நண்பர்களுடன் விடுதியை பகிர்ந்து இருக்க முடிவாகிச்சு. தங்கி ஐந்து நாட்களுக்குள் முதல் மாத வாடகையும் கொடுத்தாச்சு. தங்கும் விடுதிக்கான வாடகை 5000. அங்கு சமையல் செய்பவருக்கு 1500 என மொத்தமா 6500 கொடுத்தாச்சு. சமையல் பொருட்களுக்கான நாளாந்த செலவுகள் தொலைபேசி யீ-இல் கணக்கிடப்பட்டு பகிரப்படுவதாக பேசிக்கொள்ளப்பட்டது. விடுதியும் மொத்த வாடகை 25000. நாங்கள் ஐந்து பேர் தான் விடுதியின் நிரந்தர வதிவிடவாசிகள் என்ற கணக்கில் வாடகை பகிரப்பட்டது. அதிலும் ஏமாற்றப்பட்டேன்.

ஒரு மாத முடிவில், அந்த விடுதியிலிருந்து வெளியேறு வதற்கான முன்னாயர்த்தங்களை மேற்கொள்கையிலேயேயே ஏமாற்றப் பட்டதை உணர்ந்தேன். மற்ற நண்பர்கள் ஏமாற்றியவனிடம் முரண்டுபிடித்து ஏமாறிய பணத்தை சீராக்கி கொண்டார்கள். அதாவது மேலதிகமாக ஒரு மாதம் வாடகை கொடுக்காமல் இருந்து விட்டு வெளியேறினார்கள். எனக்கு ஏமாற்றம் கடினமாக தான் இருந்தது. எனினும் செப்டெம்பர்-13 இரவு வீடு தேடி அலையாது ஒரு மாதம் தங்குவதற்கான இடம் கிடைத்த வரைக்கும் சந்தோசம் என்ற எண்ணத்துடன் ஏமாற்றத்தை சமாளித்து கொண்டேன். மேலும், இந்தியாவில் வெளிநாட்டினர் வேலை மற்றும் கல்வி போன்ற தேவைகளுக்காக வந்து நீண்ட



காலம் தங்குகையில் வெளிநாட்டு பிராந்திய பதிவு அலுவலகத்தில் பதினான்கு நாட்களில் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். நாட்கள் பிந்துகையில், ஆகக்குறைந்தது 5000 வரையில் செலுத்த வேண்டி ஏற்படும். இந்நிலையில் அவசரமாக எனக்கொரு முகவரி தேவைப்பட்டது. அம்முகவரி தமிழ்நாட்டு நண்பர்களின் விடுதியில் கிடைத்தது. யாவற்றுக்கும் மேலாக ஏமாற்றிய ஒருவனை விட தமிழ்நாட்டு சொந்தங்கங்கள் என்ற பெரிய நட்பு வட்டம் கிடைத்தது. டெல்லி பல்கலைக்கழக தமிழ் நாட்டு மாணவர் ஒன்றிய நிகழ்வுகள் சந்திப்புகளுக்கு என்னையும் தமிழ் என்ற அடையாளத்துடன் அழைப்பார்கள். இத்தகைய நன்மைகளை தமிழ்நாட்டு நண்பர்களின் விடுதி கொடுத்துள்ளமையால், ஏமாற்றத்தையும் படிப்பினை எனும் நன்மையாக எடுத்து கொண்டு கடந்து சென்றேன்.

தமிழ் நாட்டு நண்பர்களின் விடுதி செப்டெம்பர் மாதம் நான் உட்பட ஐந்து பேரே நிரந்தர வதிவிடவாசிகள். எனினும் அக்காலத்தில் டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தேர்தல் நடைபெற்றமையால், எங்கள் விடுதி காங்கிரஸ் மாணவர்



ஒன்றிய தேர்தல் போட்டியாளர்களின் குட்டி அலுவலகம் போன்று ஆட்கள் நிறைந்து காணப்பட்டனர். ஏறத்தாழ 10-15 பேர் தங்கினோம். விடுதியின் நிதிப்பொறுப்பை பார்த்தவன் தேர்தலை மையப்படுத்தி வந்து தற்காலிகமாக தங்கியவர்களிடமும் வாடகை பணம் வாங்கியுள்ளான். அவன் 25000 வாடகை பணத்திற்கு செப்டெம்பர் மாதம் 50000-75000 சேகரித்துள்ளான். இவ்ஏமாற்றம் அறிந்ததிலிருந்து அவ்விடுதியில் சகஜமாக இருக்க முடியவில்லை. தொடர்ச்சியாக வேறு சந்தர்ப்பங்களிலும் நிதி பகிரப்படுகையில் மற்றையவர்களும் ஏமாற்றுவார்களோ என்ற சந்தேகத்துடனேயே எவரையும் அணுக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்நிலையிலேயே புதிய விடுதி, புதிய முகவரிக்கான தேடல் ஆரம்பமாகியது. தமிழ் நாட்டு நண்பன் சிபியுடன் இணைந்து தனியார் விடுதிக்கான தேடல் ஆரம்பமாகியது. புலமைப்பரசியல் பணத்திற்கு ஏற்றவாறு 10000க்குள் வாடகை வழங்கக்கூடிய வகையில், ஏனையவர்களுடன் பகிராத வகையில் தனி அறை தேடப்பட்டது. எனினும் வாடகை பணம் சரி என்பதில் இடம் பிழையாக இருக்கும். இடம் சரி என்கையில் வாடகை பணம் பிழையாக இருக்கும். அவ்வாறாக டெல்லி தனியார் விடுதிகளை சுற்றி களைத்தாகிற்று.

மறுதளம் பல்கலைக்கழக நண்பர் குழாமிடமும் தனியார் விடுதி

தேடுவது தொடர்பில் தகவலை பகிர்ந்திருந்தேன். பல்கலைக்கழக நண்பர்கள் சத்யா மற்றும் ப்ரதீப் பல்கலைக்கழக விடுதிக்கான தேடலுடன் இருந்தார்கள். அவர்கள் தங்களுடன் என் தேடலையும் இணைத்து கொண்டார்கள். ஒருநாள் எதேச்சையாக டெல்லி பல்கலைக்கழக வளாகத்தை சுற்றியுள்ள பல்கலைக்கழக விடுதிகள் அனைத்திற்கும் நேராக சென்று, புதிய அனுமதிகளுக்கான காலத்தை விசாரிக்க பயணப்பட்டோம். மன்சரோவர் விடுதி முதல் க்வயர் கோல் என ஏறத்தாழ 5-6 பல்கலைக்கழக விடுதிகளுக்கு அலைந்தோம். அதில் ஒன்றாய் ஆண்களுக்கான டெல்லி பல்கலைக்கழக சர்வதேச மாணவர் விடுதிக்கும் சென்றிருந்தோம். அங்கு முறைப்பாட்டு விண்ணப்பத்தை கோரியிருந்தார்கள். என் இயல்பான சோம்பறி தனத்தால் என் அறைக்கு சென்று எழுதிவிட்டு மறுநாள் கடிதத்தை கொண்டு வந்து கொடுப்போம் என தீர்மானித்தேன். எனினும் நண்பன் ப்ரதீப் என்னை ஏசி விட்டு எனக்கான முறைப்பாட்டு விண்ணப்பத்தை தானே எழுதி தந்தான்.

ஒரு வார காலத்தில் ஆண்களுக்கான டெல்லி பல்கலைக்கழக சர்வதேச மாணவர் விடுதி, டெல்லியில் எனது புதிய முகவரியானது. ‘அறை இல:33, சர்வதேச மாணவர் இல்லம், மால் வீதி, டெல்லி-110007’.

புதிய முகவரியில் புதிய அனுபவங்களுடன்....



# வட்டுக்கோட்டை தேவார மடம் திறந்து வைக்கப்பட்டது.







எங்கள் ஈழத்தில் சைவத்திற்கும் தமிழிற்கும் பெரும் தொண்டாற்றும் வகையில் அழகிய முறையில் அமைக்கப்பட்ட வட்டுக் கோட்டை தேவார மடம் இன்று சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதியரர் சிவஞானம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இவ் நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர், சங்கானை பிரதேச செயலாளர், நல்லை ஆதீன முதல்வர் உட்பட்ட ஏராளமான கல்வியாளர்கள், மருத்துவர்கள், துறவிகள் மற்றும் பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

இவ் நிகழ்வில் உரையாற்றிய மாண்புமிகு நீதியரசர் சிவஞானம் அவர்கள் எங்கள் மாநிலம் தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தளவிற்கு அங்கு சைவமும் தமிழும் இல்லை என்பதை மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவித்தார். சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்களால் ஆற்றப்படும் சேவைகளை அறிந்து இப்படி ஒரு மனிதர் எங்கள் தமிழ்நாட்டிற்கு வரமாட்டாரோ என உள்ளம் ஏங்குவதாக தெரிவித்தார்.

இந்த தேவார மடத்தில் தேவார திருப்பதிகங்களை பண்ணுடன் இசைக்க கூடிய ஆற்றலை வளர்க்கும் இசை வகுப்புக்களும், அறநெறி வகுப்புக்களும், அறம் சார்ந்த விசேட நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதுடன் வாரத்தில் ஒரு நாள் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.







# பன்னிரு திருமுறைகளை நடனத்தில் நிகழ்த்திய கலைஞர்கள்

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல வேண்டும் என்பது தானே திருமுறைகளின் அடிப்படை. அதனை திறம்பட உணர்ந்து ஒவ்வொரு சொற்களுக்கும் அதற்குரிய அர்த்தம் அளித்து நடன அபிநய பாவனைகளை தமது திறமையால் மேடையேற்றிய பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவிகள் போற்றுதலுக்குரியவர்கள். அவர்கள் திறமைக்கேற்ற மேடைகள் பல கிடைக்க மனமார்ந்த வாழ்த்துக்கள்.





நெறியாள்கை செய்த பொன்னாலை சந்திர பரத கலாலய நிறுவுனர் சிறிமதி சிறிதேவி கண்ணதாசன் அவர்களுக்கும் அவர்தம் குழுவினருக்கும் உளமார்ந்த நன்றிகளும் பாராட்டுகளும்.

மேலும் இன்று ஆரம்பமாகும் வட்டுக்கோட்டை தேவார மடத்தில் இந்த தேவார திருமுறை நடன ஆற்றுகை நிகழ்ந்தமை சாலப்பொருத்தமாகும்.






உலகின் மிகப்பெரிய விளையாட்டு திரு விழாவான ஒலிம்பிக் 4 ஆண்டுகளுக்கும் ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. இந்த வகையில் 33-வது ஒலிம்பிக் திருவிழா பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் இன்று கோலாகலமாக தொடங்குகிறது. வரும் ஆகஸ்ட் 11-ம் தேதி வரை நடை பெறும் இந்த திருவிழாவில் அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், சீனா, இந்தியா உள்ளிட்ட 206 நாடுகளைச் சேர்ந்த 10,741 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். 17 நாட்கள் நடைபெறும் ஒலிம்பிக் திருவிழாவில் 39 விளையாட்டுகளில் 329 நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியை சுமார் ரூ.68 ஆயிரம் கோடி செலவில் பிரான்ஸ் நடத்துகிறது. வரலாற்றில் முதன்முறையாக ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா அணிவகுப்பு நதியில் நடைபெற்றது. போட்டிகள் பாரிஸ் உள்ளிட்ட பிரான்ஸில் உள்ள 16 நகரங்களில் நடக்கின்றன. மேலும் துணை நகரமான பிரான்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள தஹிதியிலும் போட்டி நடைபெறுகிறது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்பு பணியில் 45 ஆயிரம் போலீஸார், 10 ஆயிரம் ராணுவ வீரர்கள், 20 ஆயிரம் தனியார் பாதுகாப்பு துறை ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏஜ



தொழில்நுட்பமும் பாதுகாப்பு பணியில் முக்கிய பங்கு வகிக்க உள்ளது. முதன்முறையாக ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஏ.ஐ. தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பல்வேறு விளையாட்டுகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்குவதற்காக மொத்தம் 5,084 பதக்கங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு பதக்கத்திலும் பிரான்ஸ ின் பாரம்பரிய சின்னமான ஈபிள் கோபுரத்தின் துகள்கள் 18 கிராம் இணைக்கப்பட்டுள்ளது. தங்கப் பதக்கத்தின் எடை 529 கிராமும், வெள்ளிப் பதக்கத்தின் எடை 525 கிராமும், வெண்கலப் பதக்கத்தின் எடை 455 கிராமும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய விளையாட்டு திரு விழாவான ஒலிம்பிக் 4 ஆண்டுகளுக்கும் ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. இந்த வகையில் 33-வது ஒலிம்பிக் திருவிழா பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் இன்று கோலாகலமாக தொடங்குகிறது. வரும் ஆகஸ்ட் 11-ம் தேதி வரை நடை பெறும் இந்த திருவிழாவில் அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், சீனா, இந்தியா உள்ளிட்ட 206 நாடுகளைச் சேர்ந்த 10,741 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். 17 நாட்கள்






நடைபெறும் ஒலிம்பிக் திருவிழாவில் 39 விளையாட்டுகளில் 329 நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியை சுமார் ரூ.68 ஆயிரம் கோடி செலவில் பிரான்ஸ் நடத்துகிறது. வரலாற்றில் முதன்முறையாக ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா அணிவகுப்பு நதியில் நடைபெற்றது. போட்டிகள் பாரிஸ் உள்ளிட்ட பிரான்ஸில் உள்ள 16 நகரங்களில் நடக்கின்றன. மேலும் துணை நகரமான பிரான்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள தஹிதியிலும் போட்டி நடைபெறுகிறது.









பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்பு பணியில் 45 ஆயிரம் போலீஸார், 10 ஆயிரம் ராணுவ வீரர்கள், 20 ஆயிரம் தனியார் பாதுகாப்பு துறை ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏஐ தொழில்நுட்பமும் பாதுகாப்பு பணியில் முக்கிய பங்கு வகிக்க உள்ளது. முதன்முறையாக ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஏ.ஐ. தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பல்வேறு விளையாட்டுகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்குவதற்காக மொத்தம் 5,084 பதக்கங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு பதக்கத்திலும் பிரான்ஸின் பாரம்பரிய சின்னமான ஈபிள் கோபுரத்தின் துகள்கள் 18 கிராம் இணைக்கப்பட்டுள்ளது. தங்கப் பதக்கத்தின் எடை 529 கிராமும், வெள்ளிப் பதக்கத்தின் எடை 525 கிராமும், வெண்கலப் பதக்கத்தின் எடை 455 கிராமும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் 4 ஆண்டுகளுக்கும் ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. இந்த வகையில் 33-வது ஒலிம்பிக் திருவிழா பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் இன்று கோலாகலமாக தொடங்குகிறது. வரும் ஆகஸ்ட் 11-ம் தேதி வரை நடைபெறும் இந்த திருவிழாவில் அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், சீனா, இந்தியா உள்ளிட்ட 206 நாடுகளைச் சேர்ந்த 10,741 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். 17 நாட்கள் நடைபெறும் ஒலிம்பிக் திருவிழாவில் 39 விளையாட்டுகளில் 329 நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியை சுமார் ரூ.68 ஆயிரம் கோடி செலவில் பிரான்ஸ் நடத்துகிறது. வரலாற்றில் முதன்முறையாக ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா அணிவகுப்பு நதியில் நடைபெற்றது. போட்டிகள் பாரிஸ் உள்ளிட்ட பிரான்ஸில் உள்ள 16 நகரங்களில் நடக்கின்றன. மேலும் துணை நகரமான பிரான்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள தஹிதியிலும் போட்டி நடைபெறுகிறது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்பு பணியில் 45 ஆயிரம் போலீஸார், 10 ஆயிரம் ராணுவ வீரர்கள், 20 ஆயிரம் தனியார் பாதுகாப்பு துறை ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏஐ தொழில்நுட்பமும் பாதுகாப்பு பணியில் முக்கிய பங்கு வகிக்க உள்ளது. முதன்முறையாக ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஏ.ஐ. தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பல்வேறு விளையாட்டுகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்குவதற்காக மொத்தம் 5,084 பதக்கங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு பதக்கத்திலும் பிரான்ஸின் பாரம்பரிய சின்னமான ஈபிள் கோபுரத்தின் துகள்கள் 18 கிராம் இணைக்கப்பட்டுள்ளது. தங்கப் பதக்கத்தின் எடை 529 கிராமும், வெள்ளிப் பதக்கத்தின் எடை 525 கிராமும், வெண்கலப் பதக்கத்தின் எடை 455 கிராமும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய விளையாட்டு திரு விழாவான ஒலிம்பிக் 4 ஆண்டுகளுக்கும் ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. இந்த வகையில் 33-வது ஒலிம்பிக் திருவிழா பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் இன்று கோலாகலமாக தொடங்குகிறது. வரும் ஆகஸ்ட் 11-ம் தேதி வரை நடை பெறும் இந்த திருவிழாவில்








அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், சீனா, இந்தியா உள்ளிட்ட 206 நாடுகளைச் சேர்ந்த 10,741 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். 17 நாட்கள் நடைபெறும் ஒலிம்பிக் திருவிழாவில் 39 விளையாட்டுகளில் 329 நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியை சுமார் ரூ.68 ஆயிரம் கோடி செலவில் பிரான்ஸ் நடத்துகிறது. வரலாற்றில் முதன்முறையாக ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா அணிவகுப்பு நதியில் நடைபெற்றது. போட்டிகள் பாரிஸ் உள்ளிட்ட பிரான்ஸில் உள்ள 16 நகரங்களில் நடக்கின்றன. மேலும் துணை நகரமான பிரான்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள தஹிதியிலும் போட்டி நடைபெறுகிறது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்பு பணியில் 45 ஆயிரம் போலீஸார், 10 ஆயிரம் ராணுவ வீரர்கள், 20 ஆயிரம் தனியார் பாதுகாப்பு துறை ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏஐ தொழில்நுட்பமும் பாதுகாப்பு பணியில் முக்கிய பங்கு வகிக்க உள்ளது. முதன்முறையாக ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஏ.ஐ. தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பல்வேறு விளையாட்டுகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்குவதற்காக மொத்தம் 5,084 பதக்கங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு பதக்கத்திலும் பிரான்ஸின் பாரம்பரிய சின்னமான ஈபிள் கோபுரத்தின் துகள்கள் 18 கிராம் இணைக்கப்பட்டுள்ளது. தங்கப் பதக்கத்தின் எடை 529 கிராமும், வெள்ளிப் பதக்கத்தின் எடை 525 கிராமும், வெண்கலப் பதக்கத்தின் எடை 455 கிராமும் இருக்கும் வகையில் வடிவமைக்கப பட்டுள்ளது.



# உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டியில் யாழ் மருத்துவபீட அணி இரண்டாம் இடம்



இலங்கை உடற்கூற்றியல் சமூகத்தின் வருடாந்த அமர்வின் ஒரு பகுதியாக இலங்கை மருத்துவபீடங்களிற்கு இடையிலான உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டி இரண்டாவது முறையாக இவ்வருடமும் நடைபெற்றது.

இரு பகுதிகளாக நடைபெற்ற இப்போட்டியில் பத்து அணிகள் பங்குபற்றி இருந்ததுடன் இறுதி சுற்றுப் போட்டியானது கடந்த ஆனி மாதம் 30ம் திகதி இலங்கை மருத்துவ சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்முடிவில் கொழும்பு மருத்துவ பீட அணி முதலாம் இடத்தையும் யாழ். மருத்துவ பீட அணி இரண்டாம் இடத்தையும் பேராதனை மருத்துவ பீட அணி மூன்றாம் இடத்தையும் முறையே பெற்றுக்கொண்டன.

யாழ் மருத்துவ பீட அணியை பிரதி நிதித்துவப்படுத்தி விநாயகமூர்த்தி திவாகரன், சிறிஸ்கந்தராஜா லக்சன், அஸ்லாம் பாத்திமா ஹம்தா மற்றும் யுதாரா ரண்லினி ரணசிங்க ஆகியோர் போட்டியிட்டனர். மேற்படி மாணவர்களுக்கான தகுந்த ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் சிரேஷ்ட விரிவுரையாளர்களான சிவநந்தினி உதயகுமார், துரைரட்ணம் செந்தூ ரன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் யாழ் மருத்துவ பீட உடற்கூற்றியல் துறை வளவாளர்கள் வழங்கினர்.

# புதினம் கேட்டியளோ...!


என்ன உங்க மகன் இங்கிலாந்து போய் இங்கிலீஸை மறந்திட்டானாம்
ஓமோம்....! எங்கட சனம் முழுக்க இப்ப அங்கதானே நிக்குது....!
31/07/24



# சிங்கப் பெண் சமாரி அத்தப்பத்து

எஸ்.எஸ்.நுஜன்

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியானது கடந்த வாரம் ஆசிய கோப்பையை வென்றது. இலங்கையில் நடந்த இத்தொடரின் இறுதி போட்டியில் இந்தியா மகளிர் அணியுடன் பலப் பரீட்சை நடத்தினர். இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி மற்றும் இலங்கை மகளிர் கிரிக்கெட்டின் மீட்பரான சாமரி அத்தபத்து பற்றிய அலசலாக இந்த பதிவு அமைகிறது.

இதுபோன்ற ஒன்றை நீங்கள் இதற்கு முன்பு கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். இது ஒருவேளை மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கலாம். ஆனால் இது வேறு. முதலில், கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை மகளிர் கிரிக்கெட் பற்றி நீங்கள் கேள்விப்பட்டவற்றை பற்றி சிந்தியுங்கள். நியூசிலாந்தை அவர்கள் சொந்த மண்ணில் ஒருநாள் தொடரில் தோற்கடித்தபோது, இங்கிலாந்து மண்ணில் ரி20 தொடரில் இங்கிலாந்தை வென்றபோது, தென்னாப்பிரிக்காவில் முதல்முறையாக ஒருநாள் தொடரை சமன் செய்து, ரி20 தொடரில் அவர்களை வெற்றி பெற்ற போது, இதற்கெல்லாம் மையமாக இவ் வெற்றிகளுக்கு காரணமாக இருந்தவர் தான் இந்த சமாரி.

2023 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதி, இலங்கை எந்த விதமான கிரிக்கெட் இலும் முதல் முறையாக நியூசிலாந்தை தோற்கடித்தது, இதன் போது சமாரி 83 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களைப் பொழிந்தார். ஆறு நாட்களுக்குப் பிறகு அவர் 80 பந்துகளில் 140 ரன்களை விளாசினார், இலங்கை

















மீண்டும் நியூசிலாந்தை வீழ்த்தியது. அதற்குப் பிறகு ஒன்பது நாட்களுக்குப் பிறகு, அத்தபத்து, 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்கள் எடுத்து, நியூசிலாந்திற்கு எதிரான இலங்கையின் முதல் ரி20 சர்வதேச வெற்றியை உறுதி செய்தார். இங்கிலாந்தில், அவர் 31 பந்தில் 55 ஓட்டங்க ளையும், பின்னர் 28 பந்தில் 44 ஓட்டங்களையும் எடுத்த போது, இலங்கை முதல் முறையாக ஒரு தொடரில் இங்கிலாந்தை வென்றது. தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக இவர், 139 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 195 ரன்கள் அடிக்க, 300 ஓட்டங்களுக்கு மேல் இலக்கை துரத்திய முதல் பெண்கள் அணி என்ற பெருமை இலங்கை மகளிர் அணிக்கு கிடைத்தது. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான T20I தொடரில் இவர் 46 பந்துகளில் 73 ஓட்டங்கள் எடுத்து, இலங்கை மகளிர் அணி வெல்ல உதவினார்.

மேலும் இவருக்கு துணையாக ஹர்ஷித சமரவிக்ரம, கவிஷா தில்ஹாரி, விஷ்மி குணரத்ன, அத்துடன் இனோகா ரணவீர மற்றும் உதேஷிகா பிரபோதனி போன்ற மூத்த பந்துவீச்சாளர்கள் உள்ளனர். ஆனால் பெரும்பாலான இன்னிங்ஸ்களில் அத்தபத்துவை இலங்கை பெரிதும் நம்பியுள்ளது. இந்த இன்னிங்ஸின் சிறப்பு காணொளிகள் கூட யூடியூபிலோ அல்லது எளிதில் அணுகக்கூடிய தளத்திலோ கிடைக்கவில்லை என்பது துரதிஷ்டம் .

அதபத்து 2023ல் சர்வதேச கிரிக்கெட்டில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தும் போது, ஐபில் போன்று மகளிர் பங்குபற்றும் இந்தியாவின் மகளிர் பிரீமியர் லீக், இங்கிலாந்தின் மகளிர் நூறு, மற்றும் ஆஸ்திரேலியாவின் மகளிர் பிக்பாஷ் தொடர்களில் நிராகரிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து தன் ஏமாற்றத்தை, சமூக வலைதள பதிவில் வெளிப்படுத்தினார்.

அதிர்ஷ்டம் இருந்தது போல், ஆஸ்திரேலியாவின் மகளிர் பிக்பாஷ் WBBL 2023 இல், சிட்னி தண்டர் அணிக்கு மாற்று வெளிநாட்டு வீரராகக் கொண்டு வரப்பட்டார். இந்த லீக் கட்டத்தின் முடிவில், அதபத்து 13 இன்னிங்ஸிலிருந்து 42.58 சராசரியிலும் கிட்டத்தட்ட 130 ஸ்ட்ரைக் ரேட்டிலும் ஐந்து அரைச்சதங்களுடன், 511 ஓட்டங்கள் எடுத்தார். அந்த நேரத்தில் ஆஸ்திரேலிய ஓடடக் குவிப்பாளரான பெத் மூனி மட்டுமே சமாரியை விட அதிக ஓட்டங்கள் எடுத்தார். இரண்டாவது அதிக ரன் எடுத்தவர் தவிர, அதபத்து ஓவருக்கு 6.79 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து தலா 25.55 ஓட்டங்களுக்கு ஒன்பது விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தார். இதன் பலனாக WBBL 09 இன் தொடர் ஆட்டநாயகி விருது வழங்கப்பட்டது மற்றும் இதன் போது அத்தபத்து, அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் தொடக்க ஆட்டக்காரர் கேட்டி மேக்கை ஒரு வாக்கு வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

இவை சிறிய நிகழ்ச்சிகள் அல்ல. அதபத்து தனது நாட்டுக்கு மட்டுமல்ல, சமாரி மகளிர் கிரிக்கெட்டின் மிகப்பெரிய சக்திகளில் ஒருவராக மாற்றியுள்ளார். ஆனால் தற்போது யாரும் ஆளாதது போல் சர்வேதேச கிரிக்கெட்டை ஆள்கிறார். மேலும் இவற்றுக்கு சமாரி அதபத்து மிகவும் தகுதியானவள். கோப்பை வென்ற சமாரிக்கும் இலங்கை மகளிர் அணிக்கும் துமியின் வாழ்த்துகள்.

